# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8064857

1. District / மாவட்டம் : VELLORE — PS / காவல்நிலையம் : VIGILANCE & ANTI-CORRUPTION, VELLORE — Year / ஆண்டு : 2019 — FIR No / மு.த.அ. எண் : 2/2019 — Date / நாள் : 11.10.2019

2. (i) Act சட்டம் : Prevention of Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள் : 7 of P.C. Act 1988 as amended by P.C. (Amendment) Act 2018.
   (ii) Act சட்டம் : — Sections பிரிவுகள் :
   (iii) Act சட்டம் : — Sections பிரிவுகள் :
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from / நாள் முதல் : — — Date to / நாள் வரை : 30.9.2019 & 9.10.2019
   Time Period : நேர அளவு — Time from / நேரம் முதல் : — — Time to / நேரம் வரை : —
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 11.10.2019 — Time / நேரம் : 07.00hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : VOLUME-II 2019 — Time / நேரம் : 07.00hrs and 08.00hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : Tamil Typed complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : North Direction - 7 kms
   Beat Number : முறைக் காவல் எண் :
   (b) Address : முகவரி : Sub-Registrar Office, Katpadi, Vellore District.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : S. Sasikumar — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : Sriramalu
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 1983 — (d) Nationality : நாட்டினம் : INDIAN — (e) Passport No : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் :
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் : — Place of Issue : வழங்கப்பட்ட இடம் :
   (f) Occupation : தொழில் : Own Business. — (g) Address : முகவரி : No. 78, Maruthi Nagar, Thirunagar Extension, Kalinzhur, Vellore District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. Tr. N.E. Devarajan, Sub-Registrar, Katpadi, Vellore.
   2. Tr. Chandramohan, Document Writer, Katpadi Sub-Registrar Office, Katpadi, Vellore District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   NO DELAY

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 11-10-2017
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ..............................
Rank: நிலை ...................... No. எண் ..........

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:-</u> வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் S.விஜயலட்சுமி ஆகிய நான் 11.10.2019-ஆம் தேதி காலை 0700 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, புகார்தாரர் திரு.S.சசிகுமார், த/பெ ஸ்ரீராமுலு, எண்.78, மாருதி நகர், திருநகர் விரிவு, கழிஞ்சூர், வேலூர்-6 என்பவர் நேரில் ஆஜராகி, திரு.தேவராஜன், சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், காட்பாடி, வேலூர் மாவட்டம் மற்றும் திரு.சந்திரமோகன், பத்திர எழுத்தர், காட்பாடி சார் பதிவாளர் அலுவலகம், காட்பாடி ஆகியோர் பத்திரப்பதிவிற்காக லஞ்சம் கேட்பதாக கொடுத்த புகாரை பெற்று என்னுடைய தகவலாளர்களை தொடர்பு கொண்டு எதிரிகளின் நடத்தை குறித்து விசாரணை செய்ததில் எதிரியானவர்கள், அவர்கள் பணிபுரியும் பகுதியில் உள்ள பத்திரப்பதிவிற்காக சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வரும் பொது மக்களிடம் பத்திர எழுத்தர் திரு.சந்திரமோகன் அவர்களின் மூலமாக சார் பதிவாளர் திரு.தேவராஜன் அவர்கள் லஞ்சமாக பணம் பெறுவது உறுதி செய்யப்பட்டது. மேலும் புகார்தாரரின் நம்பகத்தன்மை விசாரிக்கப்பட்டது. திரு.தேவராஜன், சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், காட்பாடி, வேலூர் மாவட்டம் மற்றும் திரு.சந்திரமோகன், பத்திர எழுத்தர், காட்பாடி சார் பதிவாளர் அலுவலகம், காட்பாடி ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்ய முகாந்திரம் இருந்தமையால் சென்னை இயக்குநரக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அனுமதிப் பெற்று கீழ்கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகார்தாரர் கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் S.சசிகுமார், த/பெ ஸ்ரீராமுலு, எண்.78, மாருதி நகர், திருநகர் விரிவு, கழிஞ்சூர், வேலூர்-6. பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அய்யா, நான் லாரி வைத்து பார்சல் சர்வீஸ் நடத்தி வருகிறேன். எனக்கு திருமணமாகிவிட்டது. என்னுடைய மனைவி பெயர் அனுராதா. எங்களுக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர். எனக்கு விஜயகுமார் என்கிற அண்ணன் உள்ளார். அவருக்கும் திருமணமாகி, ஒரு மகன் உள்ளான். நாங்கள் கூட்டு குடும்பமாக இருந்து வருகிறோம். என்னுடைய தந்தையார் திரு.ஸ்ரீராமுலு (லேட்) அவர்கள் தன் சுயசம்பாத்தியத்தில் வாங்கிய சொத்து காட்பாடி தாலுக்கா காட்பாடி சர்வே எண்.636/2B-ல் பாரதிநகர் மெயின் ரோடில் 7,945 சதுர அடி அளவுள்ள வீடு மற்றும் காலி மனையும், காட்பாடி சர்வே எண்.639/2, 640-ல் பாரதிநகர் 4-வது குறுக்குத் தெருவில் 1,209 சதுர அடி அளவுள்ள கடை கட்டுவதற்கான காலி மனையும், காட்பாடி சர்வே எண்.633/1-ல் பாரதிநகர் மெயின் ரோடில் 2,255 சதுர அடி அளவுள்ள கடை கட்டுவதற்கான காலி மனையும் என்னுடைய தந்தையார் திரு.ஸ்ரீராமுலு அவர்களின் பெயரில் உள்ளது. மேலும், என்னுடைய தாயார் திருமதி.ஜெயலஷ்மி (லேட்) அவர்களின் பெயரில்

காட்பாடி தாலுக்கா ஜாப்ராபேட்டை கிராமம், கீழ்வடுகன்குட்டை சர்வே எண்.22/6, 22/7A, 22/7B, 22/8 ஆகியவற்றில் 2 ஏக்கர் 46 சென்ட் அளவுள்ள நிலம் உள்ளது. மேற்படி சொத்துக்களை நானும், எனது அண்ணன் விஜயகுமார் அவர்களும் பேசி, சரி சமமாக பிரித்துக்கொள்ள முடிவு செய்தோம். மேற்படி பிரித்துக்கொள்ள முடிவு செய்த சொத்துக்களை எங்களது பெயரில் பத்திரப்பதிவு செய்து கொள்ள காட்பாடியில் உள்ள சார் பதிவாளர் அலுவலகத்திற்கு கடந்த ஜூலை-2019 மாதம் நான் சென்று அங்கு பணியில் இருந்த சார் பதிவாளர் திரு.தேவராஜ் அவர்களை பார்த்து விவரங்களை சொன்னபோது, அவர் என்னிடம் பத்திர எழுத்தர் திரு.சந்திரமோகன் என்பவரை போய் பார்க்க சொல்லி, அவரிடம் விவரங்களை தெரிவித்தால், அவர் உங்களை என்னிடம் கூட்டி வருவார் அப்போது நான் அவரிடமும், உங்களிடமும் பத்திரப்பதிவிற்கான விவரங்களை சொல்கிறேன் என்று சொன்னார். நானும் அன்றே சார் பதிவாளர் சொன்னதுபோல காட்பாடி சார் பதிவாளர் அலுவலகத்தில் விசாரிக்க அங்கு கணிணி அறையில் இருந்த பத்திர எழுத்தர் திரு.சந்திரமோகன் அவர்களை சந்தித்து, காட்பாடி சார் பதிவாளர் திரு.தேவராஜ் அவர்கள் சொன்ன விவரங்களை அவரிடம் சொன்னேன். அதற்கு அவர் என்னிடம் சொத்துக்களுக்குண்டான பட்டா, வரைபடம் ஆகியவற்றை பெற்றுக்கொண்டு வந்து தன்னை சந்திக்குமாறு கூறி அனுப்பிவிட்டார். நான் கடந்த 06.09.2019-ஆம் தேதி பத்திர எழுத்தர் திரு.சந்திரமோகன் அவர்கள் சொன்னவற்றை தயார் செய்து எடுத்துக் கொண்டு காட்பாடி சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்த திரு.சந்திரமோகன் அவர்களை மாலை சென்று சந்தித்தேன். அவர் நான் கொடுத்த அனைத்து ஆவணங்களையும் பார்த்துவிட்டு, என்னை காட்பாடி சார் பதிவாளர் அலுவலகத்தில் பணியில் இருந்த சார் பதிவாளர் திரு.தேவராஜ் அவர்களிடம் அழைத்து சென்று, விவரத்தை கூறினார். அப்போது சார் பதிவாளர் திரு.தேவராஜ் அவர்கள் என்னையும் திரு.சந்திரமோகன் அவர்களையும் அருகில் இருந்த யாருமில்லாத பதிவறைக்கு அழைத்து சென்று, நான் கொண்டு சென்ற ஆவணங்களை பார்வையிட்டுவிட்டு, திரு.சந்திரமோகன் அவர்களிடம் டாகுமெண்ட்டுகளை தயார் செய்து கொண்டு வருமாறு சொல்லி எங்களை அனுப்பிவிட்டார். திரு.சந்திரமோகன் தான் டாகுமெண்ட்டுகளை ரெடி செய்துவிடுவதாக சொன்னார். பின்னர், கடந்த 30.09.2019-ஆம் தேதியன்று பத்திர எழுத்தர் திரு.சந்திரமோகன் அவர்களை காட்பாடி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு எதிரில் உள்ள அவரது அலுவலகத்திற்கு அன்று மாலை சென்று பார்த்து டாகுமெண்ட்டுகளை தயார் செய்துவிட்டீர்களா என கேட்க, அவர் தான் டாகுமெண்ட்டுகளை தயார் செய்து விட்டதாக சொல்லி சார் பதிவாளரை பார்த்து, டாகுமெண்ட்டுகளை காண்பித்துவிட்டு, உத்தரவு வாங்கி வரலாம் என்று சொன்னதன் பேரில், அப்பொழுதே நானும் பத்திர எழுத்தர் திரு.சந்திரமோகன்

அவர்களும் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று சார் பதிவாளர் திரு.தேவராஜ் அவர்களை பார்த்தபோது, அவர் எங்களை யாருமில்லாத பதிவறைக்கு அழைத்து சென்று, பத்திர எழுத்தர் திரு.சந்திரமோகன் அவர்கள் தயார் செய்த ஆறு டாகுமெண்ட்டுகளை பார்வையிட்டு, அதில் சில திருத்தங்களை செய்து பத்திர எழுத்தர் திரு.சந்திரமோகன் அவர்களிடம் திரும்ப கொடுத்துவிட்டு, மேற்படி ஆறு டாகுமெண்ட்டுகளை பதிவு செய்ய அரசிற்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை சேர்க்காமல், தனக்கு தனியாக ரூ.1,00,000/-ஐ லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்று என்னிடம் சொன்னார். மேலும், மேற்படி பணத்தை பத்திர எழுத்தர் திரு.சந்திரமோகன் அவர்களிடம் பத்திரப்பதிவு செய்யும்போது கொடுத்துவிடுங்கள் என்று என்னிடம் கூறினார். நானும் வேறு வழியில்லாமல் எதுவும் சொல்லாமல் அங்கிருந்து வந்துவிட்டேன். பின்னர், கடந்த 09.10.2019-ஆம் தேதி மாலை நான் காட்பாடி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று சார் பதிவாளர் திரு.தேவராஜ் அவர்களை திரும்பவும் சந்தித்தேன். அவர் என்னை வழக்கம்போல் யாருமில்லாத பதிவறைக்கு அழைத்து சென்று அவர் என்னிடம் வந்த விவரத்தை கேட்டார். அப்போது நான் அவரிடம் மேற்படி ஆறு பத்திரங்களை பதிவு செய்ய ரூ.1,00,000/-ஐ லஞ்சமாக கேட்கிறீர்கள், மேற்படி சொத்தில் எந்த வில்லங்கமும் இல்லை, மேலும், அரசுக்கு செலுத்த வேண்டிய தொகையை விட நீங்கள் கேட்கும் அமௌண்ட் அதிகமாக உள்ளது, கொஞ்சம் பார்த்து செய்யுங்கள் என்று கெஞ்சி கேட்டதற்கு, அவர் நான் கேட்ட பணம் ரூ.1,00,000/-ஐ லஞ்சமாக எனக்கு கொடுத்தால்தான் உன்னுடைய பத்திரங்களை பதிவு செய்வேன் என்றும் நான் கேட்ட பணத்துடன் 11.10.2019-ஆம் தேதி வருமாறு கறாராக சொல்லி என்னை அனுப்பிவிட்டார். பின்னர் பத்திர எழுத்தர் திரு.சந்திரமோகன் பணத்துடன் 11.10.2019 தேதி வருமாறும் தான் டோக்கன் போட்டு வைப்பதாக சொல்லி என்னை அனுப்பி வைத்தார். மேற்படி என்னுடைய ஆறு பத்திரங்களை பதிவு செய்து கொடுப்பதற்காக சார் பதிவாளர் திரு.தேவராஜ் அவர்கள் லஞ்சமாக கேட்கும் பணம் ரூ.1,00,000/-ஐ கொடுத்து அந்த பத்திரங்களை பதிவு செய்ய நான் விரும்பவில்லை. ஆகையால் என்னிடம் லஞ்சமாக பணம் ரூ.1,00,000/-ஐ கேட்கும் காட்பாடி சார் பதிவாளர் திரு.தேவராஜ் மற்றும் அவருக்கு உதவியாக செயல்படும் பத்திர எழுத்தர் திரு.சந்திரமோகன் ஆகியோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, ஒப்பம் XXXXXX (S.Sasikumar), 11.10.2019.

Sir, The complaint given by Tr.S.Sasikumar, S/o Sriramulu, residing at No.78, Maruthi Nagar, Thirunagar Extension, Kazhinjur, Vellore-6 was received on

11.10.2019 at 0700 hrs. sd/xxxxxx (S.Vijayalakshmi) 11.10.2019 Inspr. of Police, V&AC, Vellore.

Sir, After receiving the complaint, antecedents of the accused and credibility of the complainant were verified and with the concurrence of the DVAC, a case in Vellore Detachment, Vigilance and Anti Corruption Cr.No.20/2019 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 was registered on 11.10.2019 at 0800 hrs. sd/xxxxxx (S.Vijayalakshmi) 11.10.2019 Inspr. of Police, V&AC, Vellore.

Sir,

The registered Original First Information Report along with complaint is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Vellore and other copies of FIR to the officers' concerned.

S. Vijayalakshmi
11.10.2019
Inspr. of Police
V&AC, Vellore.